بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 02/10/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**தவக்குல் அலல்லாஹ் (அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தல்) குறித்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தூய முன்மாதிரி**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝۲ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۳ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝۴ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝۵ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝۶ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝۷

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது தொடக்கக் காலம் முதலே அல்லாஹ்வின் அருட்கொடை, அவன் தம்முடன் நடந்து கொண்ட முறை மற்றும் இறைவன் மீதான தமது நம்பிக்கை ஆகியவற்றைக் குறித்து எடுத்துரைக்கும்போது இவ்வாறு கூறுகிறார்கள்**: "சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு, எனது தந்தையார் தமது வாழ்வின் இறுதி காலத்தில் நோயுற்றிருந்த போது, எந்த நாளில் அவர்களின் மரணம் நிர்ணயிக்கப்பட்டிருந்ததோ அந்த நாளில் மதிய வேளையில் وَالسَّمَآءِ وَالطَّارِقِ என்று எனக்கு ஓர் இல்ஹாம் இறங்கியது. அதன் பொருள், 'வானத்தின் மீதும், சூரியன் மறையும் வேளையில் நிகழும் விபத்தின் மீதும் சத்தியமாக' என்பதாகும். அதோடு சேர்த்து, இது அவர்களின் மரணத்தைக் குறிப்பதாகும் என்று எனது உள்ளத்தில் போடப்பட்டது. இது இறைவன் தரப்பிலிருந்து வழங்கப்பட்ட ஆறுதலாகும்; அதாவது இரங்கல் செய்தியாக இருந்தது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "எனக்குச் செய்தி அறிவிக்கப்பட்டபோது எனக்குச் சற்று வேதனை உண்டானது. தந்தையாரின் வாழ்நாளில் அரசாங்கத்திடமிருந்து சில உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக, இனி எமக்கு நெருக்கடியின் நாட்கள் வந்துவிடுமோ என்ற பயம் உள்ளத்தில் உருவானது. அப்போது அதே கணத்தில் ஒரு சிறு மயக்க நிலை ஏற்பட்டு, اَلَیۡسَ اللّٰہُ بِکَافٍ عَبۡدَہٗ எனும் இல்ஹாம் இறங்கியது. அதாவது, 'அல்லாஹ் தன் அடியாருக்குப் போதுமானவன் இல்லையா?' என்பது இதன் பொருளாகும். இந்த இறையறிவிப்பால், கடும் வேதனையளிக்கும் ஒரு காயம் ஏதேனும் ஒரு மருந்தினால் குணமாவதைப் போல் எனது உள்ளம் வலிமைபெற்றது. உண்மையில், இறை வஹியில் மனதிற்கு ஆறுதலளிக்கும் ஒரு தனித்துவமான குணம் உள்ளது என்பது பலமுறை சோதிக்கப்பட்ட ஒரு விஷயமாகும்."

அதாவது, அல்லாஹ் போதுமானவன்; இனி எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை என்ற உறுதியான நம்பிக்கை அன்னாருக்கு ஏற்பட்டது.

**அன்னார் கூறுகிறார்கள்**: "எனக்கு இந்த இல்ஹாம் இறங்கியபோது, இறைவன் என்னை வீணாக்க மாட்டான் என்பதை நான் புரிந்து கொண்டேன். அப்போது காதியானில் வசித்து வந்த மலாவாமல் எனும் ஓர் இந்து சத்ரிய சமூகத்தைச் சேர்ந்த நபரிடம் அந்த இல்ஹாமை எழுதிக் கொடுத்து, நடந்த அனைத்து சம்பவங்களையும் அவரிடம் கூறி, முஹம்மத் ஷரீஃப் கலானூரி சாஹிப் அவர்கள் மூலமாக அதை

ஏதேனும் ஒரு கல் மோதிரத்தில் செதுக்கி முத்திரையாகச் செய்து எடுத்து வருமாறு உடனடியாக அவரை அமிர்தசரஸுக்கு அனுப்பி வைத்தேன். இந்த இந்து சாட்சியாக வேண்டும் என்பதற்காகவும், (அதேபோல்) மவ்லவி முஹம்மத் ஷரீஃப் அவர்களும் சாட்சியாக வேண்டும் என்பதற்காகவும் அவரை நான் ஆயத்தப்படுத்தினேன். அதன்படி, மவ்லவி சாஹிப் அவர்கள் மூலமாக ஐந்து ரூபாய் செலவில் அந்த மோதிரம் செய்யப்பட்டு என்னிடம் வந்து சேர்ந்தது. அது இப்போது வரை என்னிடம் உள்ளது."

அல்லாஹ்வின் அருளால் தற்போது வரை அது இருக்கிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் அல்லாஹ்வின் மீது கொண்டிருந்த நம்பிக்கையையும், உண்மையில் நிலைத்து நிற்கும் அன்னாரது தன்மையையும் அந்நியர்களும் ஒப்புக் கொண்டிருந்தனர். மலிக் ஸலாஹுத்தீன் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்**: "ஒரு சபையில் ஒருவர் ஹஸ்ரத் (அலை) அவர்களுக்கு எதிராகப் பேசத் தொடங்கினார். அப்போது, அஹ்மதி அல்லாத வழக்கறிஞரும், கொலை முயற்சி வழக்கில் ஹஸ்ரத் (அலை) அவர்களின் சார்பாக ஆஜரான வழக்கறிஞருமான மவ்லவி ஃபஸ்ல் தீன் சாஹிப் அவர்கள் மிகுந்த உணர்ச்சிப்பூர்வமாக கூறும்போது, மிர்ஸா சாஹிப் அவர்களின் மகத்தான ஆளுமையையும் நல்லொழுக்கத்தையும் நான் கண்டுணர்ந்தவன் ஆவேன். பெரும் பெரும் நல்ல மனிதர்கள் கூட சட்ட ஆலோசனைகளுக்கு ஏற்பத் தமது வாக்குமூலத்தை மாற்றிக் கொண்டதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால், உண்மையின் இடத்திலிருந்து ஒருபோதும் விலகிச் செல்லாத நபராக மிர்ஸா சாஹிப் அவர்களை மட்டுமே நான் பார்த்துள்ளேன். மார்ட்டின் கிளார்க் வழக்கின் போது நான் ஒரு சட்டப்பூர்வ வாக்குமூலத்தைத் ஆயத்தம் செய்து, குற்றம் சாட்டப்பட்டவரின் வாக்குமூலம் சத்தியப் பிரமாணத்தின்கீழ் அமைவதில்லை என்று கூறினேன். மிர்ஸா சாஹிப் அவர்கள் அந்த வாக்குமூலத்தைப் படித்துவிட்டு, இதில் பொய் உள்ளதே; குற்றம் சாட்டப்பட்டவர் பொய் பேசலாம் என்று இறைவன் அனுமதி அளிக்கவில்லையே என்று கூறினார்கள். அதற்கு நான், தாங்கள் ஏன் தெரிந்துகொண்டே தங்களை ஆபத்தில் தள்ளுகிறீர்கள் என்று கேட்டேன். ஆனால் மிர்ஸா சாஹிப் அவர்களோ, நான் இந்தச் சட்டப்பூர்வ வாக்குமூலத்தைக் கொடுத்துத் தகாத பலனைப் பெறுவதற்காக எனது இறைவனைக் கோபப்படுத்துவதா? என்ன நேர்ந்தாலும் சரி, என்னால் இதனைச் செய்ய முடியாது என்று கூறினார்கள்."

அந்த வழக்கறிஞர் கூறுகிறார்: "மிர்ஸா சாஹிப் அவர்கள் தொடர்ந்து கூறுகையில், உங்களது வழக்கறிஞர் வாதத்தால் எனக்குப் பயன் கிடைக்கும் என்று நான் ஒருபோதும் கற்பனை செய்ததும் இல்லை. எனது நம்பிக்கையோ என் இறைவன் மீதே உள்ளது; அவன் எனது உள்ளத்தைப் பார்க்கிறான். அவன் மீதே நான் தவக்குல் வைத்துள்ளேன் என்றார்கள். மேலும், எனது வாக்குமூலம் உங்களது இந்தச் சட்டப்பூர்வ வாக்குமூலத்தை விட அதிக தாக்கத்தை ஏற்படுத்தும். ஒருவேளை எனக்குத் தண்டனை கிடைத்துவிட்டாலும், எனது இறைவனுக்கு நான் மாறு செய்யவில்லை என்பதில் நான் மகிழ்ச்சியடைவேன் என்றும் கூறினார்கள். வியத்தகு விஷயம் என்னவென்றால், அன்னார் குற்றமற்றவர் என விடுதலை ஆகவும் செய்தார்கள்."

வழக்கறிஞரை நாடுவது என்பது ஓர் உலகியல் காரணியே; ஆனால் அல்லாஹ் மீது மட்டுமே தவக்குல் வைக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் இந்த முன்மாதிரியைக் கண்டு ஜமாஅத் அல்லாதவர்களும் தாக்கத்திற்குள்ளாகாமல் இருக்க முடியவில்லை.

**ஹஸ்ரத் முஃப்தி முஹம்மத் சாதிக் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்; ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:** "இக்கால மக்களின் பார்வையில் நாகரிகம் என்பது, உலகப் புழுவாக மாறிப்போவதும், இறைவனை

மறந்துவிட்டு வெளிப்படையான காரண காரியங்களை வணங்குவதில் மூழ்கிவிடுவதுமே ஆகும். ஆனால் இறைவனின் பார்வையில் நாகரிகம் என்பது, அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை உருவாகிவிட வேண்டும்; உள்ளத்திற்கு உண்மையான தூய்மை கிடைத்துவிட வேண்டும் என்பதுமே ஆகும்."

**ஒரு சபையில் சில நோய்களைப் பற்றிய பேச்சு வந்தது. அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள்**: "துஆக்களின் மூலம் நோய்கள் குணமடைவது தொடர்பான எனது மார்க்க நிலைப்பாடு எத்தகையதென்றால், என் உள்ளத்தில் இருப்பதை முழுமையாக என்னால் வெளிப்படுத்த இயலாது. ஒரு மருத்துவர் குறிப்பிட்ட எல்லை வரை சென்று நின்று விடுகிறார்; (அதன்) பின்னர் நம்பிக்கை இழந்து விடுகிறார்."

இன்றும் கூடப் பலர், டாக்டர் கைவிட்டு விட்டார் என்று கடிதம் எழுதுகிறார்கள். ஆனால் அதற்கு அப்பால், இறைவன் துஆவின் மூலமாக வழியைத் திறந்து விடுகிறான். மக்கள் நிர்ணயித்துள்ள எல்லைகளைத் தாண்டி நம்பிக்கை பிறப்பதே இறைவனைப் பற்றிய அறிவு தொடங்கும் இடமாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "முழு உலகிலும் உள்ள மருத்துவர்களும் நம்பிக்கை இழந்து, மரணத் தீர்ப்பு அளித்துவிட்டாலும் கூட, போதுமான கவனம் உருவாகும்போது துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டு நிவாரணம் கிடைத்துவிடும் என்பதே நமது மார்க்க நிலைபாடாகும்."

**ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் சியால்கோட்டி (ரலி) அவர்கள் நோய்வாய்ப்பட்ட சூழலைக் குறிப்பிட்டு, ஷேக் யாகூப் அலி சாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு இருந்த இறைவன் மீதான நம்பிக்கையின் மகத்துவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்**:

"மவ்லவி சாஹிப் (ரலி) அவர்களின் நோயின் போது ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் காட்டிய எல்லையற்ற அன்பும் தியாகமும், அல்லாஹ்வின் மீதான முழுமையான தவக்குலும் நம்பிக்கையும், அகப்பார்வை உடையவர்களுக்குப் போதுமான சான்றாகும். ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் இறைவனால் அனுப்பப்பட்டவர் என்பதற்கும், இறைவனுடன் அவர்களுக்கு உண்மையான தொடர்பு இருந்தது என்பதற்கும், யாரேனும் ஒருவர் இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை இந்த உம்மத்தில் பார்க்க விரும்பினால், உலகம் முழுவதிலும் தேடினாலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை விடச் சிறந்தவர் வேறு எவரும் இருக்க முடியாது என்பதற்கும் இதுவே சான்றாகும்."

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கடைசி நேரம் வரை துஆ செய்துகொண்டே இருந்தார்கள்; பின்னர் (இறுதி) நேரம் வந்துவிட்டபோது, அல்லாஹ்வின் நாட்டத்தை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "இறைவன் மீது நம்பிக்கை வைப்பது என்பது, அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள காரண காரியங்களை உங்களால் இயன்றவரை ஒருங்கிணைத்து, பின்னர், இறைவா! நீயே இதன் முடிவை நன்மையாக ஆக்கி வைப்பாயாக! நூற்றுக்கணக்கான ஆபத்துகளும் சோதனைகளும் உள்ளன; அவற்றால், இந்த காரண காரியங்களை தலைகீழாக மாற்றிவிடவும் முடியும். அவற்றின் பிடியிலிருந்து எங்களைக் காப்பாற்றி, உண்மையான இலக்கை அடையச் செய்வாயாக என்று நீங்கள் துஆக்களில் மூழ்கி விடுவதே ஆகும்."

**ஹஸ்ரத் செய்யித் ஸைனுல் ஆபிதீன் ஷாஹ் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: (ஊரின்) ஏதேனும் ஒரு பகுதியில் பிளேக் நோய் தென்பட்டால், ஹுஸூர் (அலை) அவர்கள் உடனே தமது வீட்டை சுத்தம் செய்ய கட்டளையிடுவதோடு,

போர்டிங் ஹவுஸையும் சுத்தம் செய்ய வைப்பார்கள்; மேலும் நண்பர்கள் அனைவரும் தமது வீடுகளில் பினாயில் பயன்படுத்த வேண்டும் என்றும், புகை மூட்ட வேண்டும் என்றும் உத்தரவிடுவார்கள். 'காரண காரியங்களைப் பயன்படுத்துவதும் அல்லாஹ்வின் அருட்கொடைக்கு நன்றி செலுத்துவதாகும்; காரண காரியங்களைக் கைவிடுவது இறை ஷரீஅத்திற்கு எதிரானதாகும். தவக்குலின் நிலை அதற்குப் பிறகே வருகிறது. காரண காரியங்களுக்குப் பின்னால் இருக்கும் அல்லாஹ்வின் கரத்தைப் பார்ப்பதே உண்மையான ஞானம் ஆகும் என்று கூறுவார்கள்."

இறை நெருக்கத்தைப் பெற்ற அடியார்களின் தவக்குலின் (இறைநம்பிக்கையின்) மகத்துவமும் விசித்திரமானது. ஒருபுறம், அவர்கள் காரண காரியங்களை எத்துனை தூரம் செயல்பாட்டிற்குக் கொண்டு வருகிறார்கள் என்றால், ஓர் உலகவாதி, 'இவர்களின் முழு நம்பிக்கையும் காரண காரியங்களின் மீது மட்டுமே உள்ளதோ' என்று எண்ணத் தொடங்கிவிடுவார். ஆனால் சில நேரங்களில், அக்காரண காரியங்களின் அவசியமே இல்லாதது போல் அவற்றை முற்றிலும் கைவிட்டும் விடுவார்கள். தவக்குலின் இத்தகைய மேன்மையை ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் வாழ்க்கையிலும் நாம் காண்கிறோம்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: "ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் மறைவிற்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, அன்னாருக்குக் கடுமையான இருமல் ஏற்பட்டது. அப்போது எனக்குப் பதினேழு வயது இருக்கும்; அன்னாருக்கு மருந்து கொடுக்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மருந்துகளும் பயன்பாட்டில் இருந்தன, ஏனைய மருந்துகளும் கொடுக்கப்பட்டன; ஆனாலும் இருமல் அதிகரித்துக்கொண்டே சென்றது. இது 1907 ஆம் ஆண்டு நடந்த சம்பவமாகும். அப்துல் ஹகீம் எனும் முர்தத், அன்னாரின் இருமல் உபாதையைப் பற்றிக் கேள்விப்பட்டு, 'மிர்ஸா சாஹிப் - நவூதுபில்லாஹ் - காச நோயினால் பாதிக்கப்பட்டு இறந்துபோவார்' என்று எழுதியிருந்தான். அதனால், தவறான முறையிலாவது அவனுக்கு மகிழ்ச்சியடைவதற்கு ஒரு சாக்குப்போக்கு கிடைத்துவிடக் கூடாது என்பதில் நான் மிகவும் எச்சரிக்கையாக இருந்தேன். சில நேரங்களில் மூச்சுத்திணறல் ஏற்பட்டு மூச்சே நின்றுவிடுமோ என்று எண்ணும் அளவுக்கு நீண்ட நேரம் இருமல் வரும்.

இத்தகைய நிலையில்தான் வெளியே இருந்து ஒரு நண்பர் வந்து, பழங்களை அன்பளிப்பாகக் கொண்டு வந்து கொடுத்தார். நான் அவற்றை அன்னாருக்கு முன்னால் வைத்து, இன்னார் கொண்டு வந்துள்ளார் என்று கூறினேன். அன்னார் அவற்றைப் பார்த்துவிட்டு, அவரிடம் ஜஸாக்கல்லாஹ் என்று கூறிவிடுங்கள் என்றார்கள். பின்னர் அவற்றில் இருந்து ஒரு வாழப்பழத்தை எடுத்தார்கள். எனக்கு ஒரு பாடம் கற்பிப்பதற்காகவோ என்னவோ, இருமல் இருக்கும்போது வாழைப்பழம் சாப்பிடுவது எப்படிப்பட்டது என்று என்னிடம் கேட்டார்கள். இது நல்லதல்ல என்று நான் கூறினேன். ஆனால் அன்னார் புன்னகைத்துக்கொண்டே தோலை உரித்துச் சாப்பிடத் தொடங்கினார்கள். நான் மீண்டும், இருமல் மிகக் கடுமையாக உள்ளது; இது இருமலின் போது நல்லதல்ல என்று கூறினேன். அன்னார் புன்னகைத்துக்கொண்டே தொடர்ந்து சாப்பிட்டார்கள். நான் எனது அறியாமையினால், இதைச் சாப்பிடக் கூடாது என்று மீண்டும் வற்புறுத்தினேன். அதற்குக் அன்னார், இருமல் நீங்கிவிட்டது என்று எனக்கு இப்போது இல்ஹாம் இறங்கியுள்ளது என்று கூறினார்கள்.

அப்போதே இருமல் முற்றிலும் நீங்கத்தொடங்கியது! அப்போது எந்த மருந்தும் பயன்படுத்தப்படவில்லை, எந்தப் பத்தியமும் பேணப்படவில்லை; மாறாகப்

பத்தியத்திற்கு மாறான விஷயமே செய்யப்பட்டது, ஆயினும் இருமல் நீங்கிவிட்டது. அதற்கு முன்பாக ஒரு மாத காலமாகச் சிகிச்சை அளிக்கப்பட்டும் இருமல் நீங்கவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இது இறைவனின் செயலாதிக்கமாகும்! பத்தியம் பேணாததால் நோய்களும் ஏற்படுகின்றன, சிகிச்சையினால் நிவாரணமும் கிடைக்கிறது. ஆனால் அல்லாஹ் நாடினால் தலையீடும் செய்கிறான். அதற்காகவே துஆ எனும் ஆயுதத்தை அல்லாஹ் மனிதனுக்குக் கற்றுக்கொடுத்துள்ளான். இறைவனிடம், 'நான் தன்னிச்சையாக இருக்க விரும்பவில்லை; எனது இக்கட்டான சூழ்நிலைகளால் நான் தவித்துவிட்டேன்; தயவுசெய்து எனது விவகாரங்களில் நீ தலையிடுவாயாக!' என்று துஆ கேட்க வேண்டும். அடியான் தன் மீது தவக்குல் வைத்துவிட்டான் என்பதையும், அவனுடைய விவகாரங்களில் தான் தலையிட வேண்டும் என்று அவன் விரும்புகிறான் என்பதையும் அல்லாஹ் பார்க்கும்போது அவனது விவகாரங்களில் தலையிடுகிறான்."

இது தொடர்பாக இன்ஷா அல்லாஹ் மேற்கொண்டு இனிவரும் காலத்தில் எடுத்துரைப்பேன்.

*ஜுமுஆ குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள். இந்தியாவின் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய முஹம்மத் அதாவுர் ரஹ்மான் சாஹிப் அவர்களைக் குறித்து கூறுகையில், மர்ஹூம் அவர்கள் கடந்த நாட்களில் 76-வது வயதில் மரணமடைந்தார்கள். மர்ஹூம் அவர்கள் வஸிய்யத் திட்டத்தில் இணைந்தவராக இருந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களுள் மனைவியைத் தவிர, ஒரு மகளும் மூன்று மகன்களும் உள்ளனர். அவர்களின் ஒரு மகன் முஃபீஸுர் ரஹ்மான் சாஹிப் போஸ்னியாவில் ஜமாஅத்தின் முரப்பியாகப் பணியாற்றி வருகிறார்; மற்றொரு மகன் ஷாஹ் நூர் சாஹிப் இந்தியாவில் முஅல்லிமாகப் பணியாற்றி வருகிறார்; மேலும், அவர்களின் ஒரு மருமகன் சாபிர் அலி சாஹிப் அவர்களும் ஜமாஅத்தின் முரப்பியாகப் பணியாற்றி வருகிறார் என்று குறிப்பிட்டார்கள்.*

*அடுத்ததாக, இந்தோனேசியாவைச் சேர்ந்த மர்ஹூமா கதீஜா சித்தீகா கோந்தோ சாஹிபா அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அடுத்ததாக இந்தோனேசியாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அப்துல் ஜலீல் சாஹிப் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஹுஸூர் அவர்கள், மர்ஹூம்களின் பாவமன்னிப்புக்காகத் துஆ செய்து, ஜனாஸா காயிப் தொழவைக்கப்போவதாக அறிவித்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)